**ஜூலை - 20**

**"நான் மெய்யான திராட்சச்செடி, என் பிதா திராட்சத் தோட்டக்காரர். என்னில் கனி கொடாதிருக்கிற கொடி எதுவோ அதை அவர் அறுத்துப்போடுகிறார்; கனிகொடுக்கிற கொடி எதுவோ, அது அதிக கனிகளைக் கொடுக்கும்படி, அதைச் சுத்தம் பண்ணுகிறார்." - யோவா 15 : 1, 2.**

திராட்சைச் செடியின் மிகச் சிறந்த கிளையும் கூடக் கனி கொடுக்கும் ஆற்றல் தனக்கிருக்கிறது என்ற சான்றை உடையதாயிருந்தாலும், அதற்குக்கிளை நறுக்கித் திருத்தம் செய்தல் தேவையாயிருக்கிறது. அதுபோல, தேவனுடைய ஜனங்களில் மிகவும் உண்மையும் ஆர்வமுள்ளவர்களுக்கும் கூடக் கர்த்தரின் ஒழுங்கும் நல்லபயிற்சியும், தெய்வீகக் கவனிப்பும் தேவையாயிருக்கின்றன. அப்படியில்லாவிட்டால், கிளை நறுக்கித் திருத்தும் செய்யப்படாத திராட்சைச்செடி, ஒன்றுக்கும் உதவாததாக ஆகிவிடுவது போல, அவர்கள் மிகுந்த கனிகளைக் கொடுக்கத் தவறிவிடுகிறார்கள். கர்த்தருடைய சித்தத்தில் முற்றிலுமாக தன்னுடைய சித்தத்தை அமிழ்த்தியிருக்கிற உண்மையுள்ள தேவனுடைய பிள்ளை, இந்த சுத்தம் செய்தலினால் விசனமடைவதுமில்லை, அதைரியப்படுவதுமில்லை. இதன் மூலம் அவன் தன்னுடைய சொந்த அறிவீனத்தின் சிறிதளவையாவது கற்றுக்கொண்டு அந்தப் பெரிய தோட்டக்காரரின் ஞானத்திலே நம்பிக்கை கொண்டிருக்கிறான். ஆகையால், தெய்வீகப் பராமரிப்பு சில திசைகளில் அவன் எடுத்துக்கொண்டிருக்கும் முயற்சிகளைத் தடை செய்தால், தன்னுடைய ஏற்பாடுகள் தடை செய்யப்படுவதை சந்தோஷமாக ஏற்றுக்கொள்ளுகிறான். அப்பொழுது கர்த்தருடைய சித்தமும் கர்த்தருடைய வழியுமே சிறந்தவைகள் என்றும் ஆசிர்வாதத்தை உண்டாக்குவதே அதன் உத்தேசம் என்றும் நிச்சயப்படுத்தப்படுகிறான். **- Z ’99, 109 (R 2464)**

தமது சீஷர்களுக்கு உதாரணங்களால் தெளிவுபடுத்தி உபதேசம் பண்ணுவதற்கு இயற்கையிலுள்ள பொருட்கள் கர்த்தருக்கு அதிகமான விஷயங்களைக் கொடுத்தது. நமது மூலவாக்கியம் கிறிஸ்துவாகிய திராட்சைச் செடியை நமது கவனத்திற்குக் கொண்டு வருகிறது. அந்தக் கிறிஸ்துவிலிருந்து நாம் கொடிகளாக வளருகின்கிறோம். பிதாவின் கவனிப்பின் கீழ் இந்தக் கொடிகள் ஒவ்வொன்றும் கிறிஸ்துவைப்போலொத்த தன்மையின் கனியைக் கொடுக்கிறது. கடைசிவரை செழிப்பான ஆவிக்குரிய கனிகளைக் கொடுக்கத்தக்கதாக அவைகளைத் தோட்டக்காரர் தொடர்ச்சியாக சுத்தம் பண்ணத் தேவையாயிருக்கிறது. **- P ’33, 80.**

**ஒத்து வாக்கியங்கள் :-**

**யோவா 15:3-8; எபி 12:2-17; 13:20; எபே 5:23; லூக் 1:69; யோவா 14:6; எபி 6:7,8; யோவா 13:10; 17:17; எபே 5:26; 1பேது 1:22; எபி 12:4-14; 2பேது 1:2-10; 1யோவா 1:9.**

**கோபுர வாசிப்பு : Z ’05, 121 (R 3544)**

**வினாக்கள் : இந்த வாரத்தில் கிளை நறுக்கப்படலின் அனுபவங்கள் என்ன? அவை எவ்வாறு சமாளிக்கப்பட்டன? அவை என்ன பலனில் முடிந்தன?**